# இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| M.C.O.P.No. | 341/2024 | ம.சா. | :1 |
| பெயர் | திரு. கண்ணிச்சாமி | | |
| த/பெ. | :திரு. ராமன் | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : | தொழில் | : |

**முதல்விசாரணை**

நான் MCOP 341/2024 மனுவில் மனுதாரர். முதல்விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தை எனது முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். முதல் தகவல்அறிக்கையின் சான்று நகல் ம.சா-ஆ.1 ஆகவும், பார்வை மகசரின் சான்று நகல் ம.சா-ஆ.2 ஆகவும், மாதிரி வரைபடத்தின் சான்று நகல் ம.சா.ஆ.3 ஆகவும், TN 01 AF 5981 வாகனத்தின் மோ.வா.ஆய்வாளர் அறிக்கையின் சான்று நகல் ம.சா.ஆ.4 ஆகவும், எனது காயச்சான்றிதழ் சான்று நகல் ம.சா.ஆ.5 ஆகவும், இறுதி அறிக்கையின் சான்று நகல் ம.சா.ஆ.6 ஆகவும், மருத்துவமனை வெளியேற்று குறிப்பு அசல் ம.சா.ஆ.7 ஆகவும், எனது ஆதார் அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.8 ஆகவும், எனது வங்கி கணக்கு புத்தகத்தின் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.9 ஆகவும், எனது மைனர் மகளின் விபத்து பதிவேடு சான்று

நகல் ம.சா.ஆ.10 ஆகவும், எனது மைனர் மகளின் காயச்சான்றிதழ் சான்று நகல் ம.சா.ஆ.11 ஆகவும், மருத்துவமனை வெளியேற்று குறிப்பு அசல் ம.சா.ஆ.12 ஆகவும், எனது மைனர் மகளின் ஆதார் அடையாள அட்டை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.13 ஆகவும் குறியீடு செய்யவேண்டுகிறேன். மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை ( 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் )**

விபத்து நடந்த ரோடு கிழமேல் ரோடா அல்லது தென்வடல் ரோடா என்றால் சத்தியமங்கலம்-கோபி ரோடு திசை தெரியாது. சத்தி-கோபி ரோடு பிரதான சாலை என்றால் சரிதான். போக்குவரத்து அதிகமுள்ள சாலை என்றால் சரிதான். நான் கோட்டுப்புள்ளாம்பாளையத்திலிருந்து கோபியை நோக்கி வந்து கிழக்கு நோக்கி திரும்பினேன். அவ்வாறு கிழக்கு நோக்கிதிரும்பும்போது விபத்து நடந்ததாக சொல்கிறேனா என்றால் ஆமாம். விபத்து நடந்த நேரமானது இருட்டான நேரம் என்றால் சரிதான். நானும், என் மகளும் இருசக்கர வாகனத்தில் சென்றோம். கிழக்கு நோக்கி திரும்பும்போது சைகை செய்யாமலும், இன்டிகேட்டர் போடாமலும் திரும்பினேன் என்றால் சரியல்ல. எத்தனை கி.மீ வேகத்தில் சென்றேன் என்றால் மெதுவாகத்தான் சென்றேன் கி.மீ வேகம் தெரியாது. கார் சத்தியமங்கலத்திலிருந்து கோபியை நோக்கி வந்தது என்றால் சரிதான். கார் ரோட்டின் இடதுபுறம் வந்தது என்றால் சரிதான். போக்குவரத்து விதிமுறையின்படி கார் இடதுபக்கம் தான் வந்தது என்றால் சரிதான். நான்தான் திடீரென்று சைகை செய்யாமல் கிழக்கு நோக்கி திரும்பியதால் தான் விபத்து நடந்தது என்றால்சரியல்ல. நான் மது அருந்தியிருந்தேன் என்றால் சரியல்ல. எனது விபத்து பதிவேட்டு சான்றை தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். என் மகளின் விபத்து பதிவேட்டு நகலை தாக்கல் செய்துள்ளேன். நான் மது அருந்தியிருந்ததாக விபத்து பதிவேட்டு நகலில் குறிப்பிடப்பட்டிருந்தது என்றும், அதனால் தான் விபத்து பதிவேட்டை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் தவிர்த்து விட்டேன் என்றால்சரியல்ல. எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு உரிமம் இல்லைஎன்றால் சரிதான். மேற்படி வாகனம் எனக்கு சொந்தமானது. எனது இருசக்கர வாகனத்தின் மோ.வா.ஆய்வாளர் அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால்சரிதான். மேற்படி வாகனம் எனக்கு சொந்தமானது என்று காண்பிக்க பதிவு சான்றை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் ஆமாம். கார் ஓட்டுநருக்கும் லைசென்ஸ் இல்லை என்றால் சரிதான். விபத்தானது 01.04.2022 க்கு பின்னிட்டு நடந்தது என்பதாலும், கார் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாலும் 3 ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 01-04-2022 க்கு பின்னிட்டு விபத்து நடந்தது என்பதால் இன்சூரன்ஸ் நிறுவனம் எனக்கு இழப்பீடு செலுத்திவிட்டு ஓட்டுநர் மற்றும் உரிமையாளரிடம் வசூல் செய்யவேண்டியது நடைமுறையில் இல்லை என்பதால் நான் 3 ம் எதிர்மனுதாரரிடமிருந்து இழப்பீடு கோர இயலாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.7 ஆவணத்தில் எனது வயது 44 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொய்யாக எனது வயது 37 என்று மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும், என் மகளுக்கும் ஏற்பட்ட காயங்கள் சிறு காயங்கள் என்று மருத்துவ சான்றிதழில் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் இருவரும் தலைகவசம் அணியவில்லை என்றால் சரிதான். மாதம் 30 ஆயிரம் சம்பாதித்து வந்தேன் என்று

காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அரசு மருத்துவமனையில்தான் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். 02-09-2024 க்கு பின்னிட்டு நான் தொடர் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் ஆமாம். 28-08-2024 க்கு பின்னிட்டு என் மகளும் தொடர் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் ஆமாம். என் மகள் 9 ம் வகுப்பு படித்து வருகிறார். நான் விவசாய வேலை செய்கிறேன். ஓட்டுநர் உரிமம் இல்லாமலும், போக்குவரத்து விதிமுறைகளை கடைப்பிடிக்காமலும், மதுபோதையில் மோட்டார் வாகன விதிமுறைகளுக்கு எதிராக இருசக்கர வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றும், எனவே நான் 3 ம் எதிர்மனுதாரரிடமிருந்து இழப்பீடு கோர இயலாது என்பதால் மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.